සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2012

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடல், ஊடகக் கல்வி I, II
**Communication and Media Studies I, II**

## தொடர்பாடல், ஊடகக் கல்வி II

※ **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** அசந்த, வசந்த, சமந்த ஆகிய மூன்று நண்பர்களும் ஒரே பாடசாலையில் கல்வி கற்று தமது உயர்கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் வெகுசன ஊடகத்துறையில் இணைந்து கொண்டனர்.

அசந்த – தொலைக்காட்சி நிகழ்ச்சி இயக்குனர்

வசந்த – செய்திப் பத்திரிகையொன்றின் செய்தியாளர்

சமந்த – வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்

(i) அவர்கள் மூவரும் இணைந்து கொண்ட தொடர்பாடல் வகை யாது ?

(ii) **வானொலி** மற்றும் **தொலைக்காட்சி** ஊடகங்களை அடையாளப்படுத்தப் பயன்படும் பொதுவான பதம் என்ன ?

(iii) அசந்த தனது தொழில்சார் வகிபாகத்தில் மேற்கொண்ட **இரண்டு** கடமைகளைப் பெயரிடுக.

(iv) சமந்த தனது வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பின் ஆரம்ப கட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய **இரண்டு** பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக.

(v) செய்திப் பத்திரிகைகளுக்கு புகைப்படங்கள் அவசியமென வசந்த எப்போதும் கூறுவதுண்டு. அவ்வாறாகப் புகைப்படங்கள் பயன்படுத்தப்படும் **இரண்டு** எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுக.

(vi) அசந்த தனது படைப்புக்களுக்காக 'கலை இயக்குனர்' ஒருவரிடமிருந்து சேவையைப் பெற்றார். கலை இயக்குனரால் மேற்கொள்ளப்பட்ட **இரண்டு** கடமைகளைப் பெயரிடுக.

(vii) தனது வானொலி நிகழ்ச்சிகளில் பின்னணிக் கதையாடலை (background naration) மேற்கொள்ள கலைஞர் ஒருவரை சமந்த ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அவ்வாறான கலைஞர் ஒருவரிடம் இருக்கவேண்டிய **இரண்டு** அடிப்படைத் திறன்களைப் பெயரிடுக.

(viii) வசந்தவின் தொழிலில் ஈடுபடும் ஒரு நபரிடம் இருக்கவேண்டிய **நான்கு** தகைமைகளைக் குறிப்பிடுக.

(ix) சமந்தவினால் வித்தியாசமான வடிவங்களில் வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியும். அவ்வாறான வடிவங்கள் **நான்கைக்** குறிப்பிட்டுக் காட்டுக.

(x) செய்தி சேகரித்தலில் வசந்த பயன்படுத்தக்கூடிய **நான்கு** செய்தி மூலங்களை எழுதுக.

**2.** சீதா, பின்தங்கிய பகுதியொன்றில் வசித்துவரும் தனது பாடசாலை நண்பியான கீதாவை தனது வழியே சந்தித்தார். இருவரும் நட்புடனான உரையாடலை இணைந்து மேற்கொண்டனர்.

(i) அவ்வாறான சூழலில் நடைபெற்றிருக்கக்கூடிய தொடர்பாடலின் வகை யாது ?

(ii) இவ்வாறான கலந்துரையாடலில் எழுந்திருக்கக்கூடிய **இரண்டு** தடைகளைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் ஒன்று வீதம் தருக.

(iii) மேற்படி சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடிய **ஆறு** வாய்மொழியற்ற தொடர்பாடல் வழிமுறைகளைச் சுருக்கமாக விபரிக்க.

(iv) இருவரும் தகவல்களைத் தமக்கிடையே எதிர்காலத்தில் மீண்டும் பரிமாறிக் கொள்வதென அவர்களது சந்திப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான தொடர்பில் பயன்படுத்தக்கூடிய **நான்கு** தொலைதூர தொடர்பாடல் வழிமுறைகளை விபரிக்க.

[பக். 7 ஐப் பார்க்க

**3.** வெகுசன ஊடகங்களைக் கிரமமாகப் பயன்படுத்தும் விமல் ஒரு பெறுநர் ஆவார். அவற்றினால் தரப்படும் செய்திகள் தொடர்பில் அவர் முழுமையான நம்பிக்கை கொண்டு பணியாற்றுகிறார். ஆனால் வெகுசன ஊடகங்கள் பற்றிய ஓர் ஆய்வு அறிவை அவர் கொண்டிருக்கவில்லை.

(i) விமல் எந்த வகையான பெறுநர் ஆவார் ?

(ii) குறித்த வெகுசன ஊடகங்களின் உள்ளடக்கம் தொடர்பில் ஒரு பெறுநர் மேற்கொள்ளவல்ல **இரண்டு** எதிர்வினைகளைச் (responses) சுருக்கமாக விவரிக்க.

(iii) பெறுநர்களின் எதிர்வினைகள் சம்பந்தமான ஆய்வில் பயன்படுத்தக்கூடிய **மூன்று** செயல்முறைகளைச் சுருக்கமாக விபரிக்க.

(iv) விமர்சன மனநிலையுடைய பெறுநர் ஒருவரின் **நான்கு** குணாம்சங்களைச் சுருக்கமாக விபரிக்க.

**4.** புகைப்படப்பிடிப்பாளரான ரஞ்சித் ஒரு செய்திப் பத்திரிகை ஒன்றில் ஒரு சுயாதீனச் செய்தியாளராகவும் (freelance reporter) கடமையாற்றுகிறார்.

(i) புகைப்படம் எடுத்தல் கண்டுபிடிக்கப்படுவதற்கு வெகு காலம் முன்னரே சுவரில் தெறிக்கப்படும் நிழல்களை அவதானிக்கும் தன்மையை மக்கள் அறிந்திருந்ததாக ரஞ்சித் நூல் ஒன்றில் வாசித்தறிந்துள்ளார். இவ்வாறான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணத்தின் பெயர என்ன ?

(ii) செய்திப் பத்திரிகையின் தேவைகளுக்கு ஏற்றபடி புகைப்படங்களை எடுப்பதில் ரஞ்சித் எப்போதும் கவனமாக இருந்து வருகிறார். செய்தி அறிக்கையிடுதலில் புகைப்படங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதற்கான **நான்கு** காரணங்களை எடுத்துக் காட்டுக.

(iii) புகைப்படங்களை எடுப்பதற்காக புகைப்படச்சுருள்களைத் தெரிவுசெய்யும் போது ரஞ்சித் அவசியம் கவனம் செலுத்த வேண்டிய **மூன்று** அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்க.

(iv) செய்திப் பத்திரிகை அறிக்கையிடுதலில் ஒழுக்கநெறிகளின்பால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென ரஞ்சித் உறுதியாக நம்புகிறார். அவர் தனது அறிக்கையிடலில் பின்பற்ற ஏதுவான செய்திப் பத்திரிகை ஒழுக்கநெறிகள் **நான்கைச்** சுருக்கமாக விவரிக்க.

**5.** (i) "இலங்கையின் அனைத்து வானொலி அலைவரிசைகளும் கொழும்பு நகரிலிருந்தே இயங்குகின்றன". இக்கூற்றுடன் நீங்கள் இணங்குகின்றீர்களா ? உங்கள் பதிலுக்கான காரணத்தைத் தருக.

(ii) "திரைப்படம் இயக்குனரின் ஊடகமாகும்".
இக்கூற்றுடன் நீங்கள் இணங்குகின்றீர்களா ? உங்கள் பதிலுக்கான **நான்கு** காரணங்களைத் தருக.

(iii) "அச்சுப்பதிக்கப்பட்ட புத்தகங்களுக்கு முகப்புப் பக்கம் அவசியமானதல்ல".
இக்கூற்றுடன் நீங்கள் இணங்குகின்றீர்களா ? உங்கள் பதிலுக்கான **மூன்று** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்க.

(iv) "அச்சுப்பதித்தல் வழிமுறையை கணினிகளின் பயன்பாடு இலகுவாக்கியது".
இக்கூற்றுடன் நீங்கள் இணங்குகின்றீர்களா ? உங்கள் பதிலுக்கான **நான்கு** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்க.

**6.** (i) அரசாங்கத்தின் கீழ் இயங்கும் **இரண்டு** பிரதான ஊடகக் கூட்டுத்தாபனங்களைப் பெயரிடுக.

(ii) ஊடக நிறுவனம் ஒன்றின் இயக்குனர் சபையில் உறுப்பினராக இருக்கும் ஒருவரது செயற்பாடுகள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்க.

(iii) ஊடகங்களில் இடம்பெறும் விளம்பரங்கள் பெறுநர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்கின்றன. ஒரு பெறுநரின்பால் விளம்பரங்கள் செலுத்தவல்ல முக்கியத்துவத்தை **மூன்று** காரணிகள் அடிப்படையில் விவரிக்க.

(iv) ஆக்கபூர்வமான பணியுடன் தொடர்புடைய **இரண்டு** பிரதான உரிமைகளைக் குறிப்பிட்டு, அவற்றை விவரிக்க.

**7.** செல்லிடத் தொலைபேசிகளின் அறிமுகத்துடன், பல்வேறு வகையான தொடர்பாடல் வழிமுறைகளைப் பயன்படுத்தும் தனித்த ஆற்றலைப் பொதுமக்கள் அனுபவிக்க முடிகிறது.

(i) செல்லிடத் தொலைபேசியுடன் பயன்படுத்தப்படக்கூடிய **இரண்டு** தொடர்பாடல் வகைகளைப் பெயரிடுக.

(ii) செல்லிடத் தொலைபேசியுடன் பயன்படுத்தப்படக்கூடிய ஆனால் தகவல்களைப் பரிமாறுவதுடன் **தொடர்பற்ற** வசதிகள் **நான்கைப்** பெயரிடுக.

(iii) மின்னஞ்சல்களை அனுப்புவதற்கு செல்லிடத் தொலைபேசிகள் பயன்படுத்தப்பட முடியும்.
மின்னஞ்சல்களின் **மூன்று** விசேட அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்க.

(iv) மின்னஞ்சல் தவிர இணையம் வழியாகப் பெறக்கூடிய **நான்கு** வசதிகளைப் விவரிக்க.

※ ※ ※